ரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 327(i)

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.07
1986 யூன் 16

மைச்சுக்களின் செயலாளர்கள்,
ணைக்களங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

1986 இன் புதிய சம்பளங்கள்-சம்பள அளவுத் திட்டங்களின் உச்சக் கட்டத்தில் தேக்கத்தைத் உண்டு பண்ணும் வரையறைகளை நீக்குதல்-1986.05.02 தேதியிட்ட 327 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கான திருத்தங்கள்.

---

1986-05-02 இன் 327ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை ன்வருமாறு திருத்தப்படுகிறது;

1. 5ஆம் பந்தியின் உப பந்தி (iv) ஆகச் சேர்க்க.

   "இப்பந்தியின் கீழ் வேதனங்களை மாற்றி அமைத்த பின்னர், 1985-12-31இல் பணிக்கமர்த்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் யாவருக்கும் 1986-01-01இல் இருந்து 1986 இன் புதிய சம்பள அளவுத் திட்டம் மீது ஒரு ஆண்டேற்றமும் வழங்கப்படுதல் வேண்டும்."

2. 1985-12-31இல் தனது சம்பள அளவுத் திட்டத்தில் உச்ச நிலையில் தேங்கி நிற்பவரும், அவர் கடைசியாகப் பெற்ற வேதனம், 1986 இன் புதிய வேதனங்களின் உரிய வேதன அளவுத் திட்டத்தில் வேதன நிலை ஒன்றுக்கு நேரொத்ததாக இல்லாதவருமான ஓர் உத்தியோகத்தர் 1986 இன் புதிய வேதனங்களின் உரிய வேதன அளவுத் திட்டத்தின் அடுத்த உயர் நிலையில் வைக்கப்படுதல் வேண்டும்.

3. 1986 இன் புதிய வேதனங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் ஓர் உத்தியோகத்தரது ஆண்டேற்ற விதம் முன்னரிலும் குறைவாக இருந்தால், அந்த இழப்பு அகற்றப்படும் வரையில் அத்தகைய உத்தியோகத்தருக்கு அந்த வித்தியாசம் கொடுக்கப்படுதல் வேண்டும். இது, 1986 இன் புதிய வேதனங்களின் ஆண்டேற்ற விதத்திலும் பார்க்க, எதிர்கால ஒரு தேதியிற் றுளும், உயர்ந்த ஆண்டேற்ற விதத்துக்கு உரித்துடைய ஓர் உத்தியோகத்தருக்கு ஏற்புடையதாகும்.

4. 1982-01-01க்கு முன்பு மட்டும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பில், 1981-12-29 தேதி கொண்ட 197 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் ஒவ்வொரு அளவுத் திட்டத்தினதும் வலப் பக்கத்தில் காட்டப்பட்ட தற்காலிக திருத்தங்கள் 1985-12-31 இல் இருந்த வேதனத்துடன் சேர்க்கப்பட்டு பின்னர் 1986இன் புதிய வேதனங்களுக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

5. 1982-03-26 இன் 197(iv)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3ஆம் பந்தியின் ஏற்பாடுகள் நாளாந்தச் சம்பளம் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் விடயத்தில் தொடர்ந்து ஏற்புடையனவாய் இருக்கும்.

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.